பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir


விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 15 புதன்கிழமை 28.04.2021 கதிர் 174

## இனி இது ரகசியம் அல்ல!

எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்து தமிழ் சினிமா கதாநாயகர்கள் இடையேயான போட்டி நிரந்தரமாக நீடித்தே வந்துள்ளது. காலங்கள் மாறும் போது கதாநாயகர்களின் பெயர்கள் மாறுமே தவிர போட்டி தொடரவே செய்யும்.

பக்கம்02 »

# இலங்கையில் முதல் முறையாக நாளொன்றில் தொற்றாளர் எண்ணிக்கை 1,000 ஐக் கடந்தது!




கொழும்பு, ஏப்ரல் 28

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்த நாள் தொடக்கம் முதல் முறையாக நாளொன்றில் ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் நேற்றுப் பதிவாகினர்.

நேற்று மாலை 674 பேருக்குத் தொற்று உறுதியாகி இருந்த நிலையில், நேற்றிரவு மேலும் 422 பேருக்குக் தொற்று உறுதியானது.

இதற்கமைய, நேற்று 1,096 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிகை ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 472 ஆக உயர்வடைந்துள்ளது.

# இலங்கையில் தீவிரமடையும் புதிய வைரஸ்; 2 மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுங்கள்

## பொதுமக்களிடம் வேண்டுகோள்

இலங்கையில் தற்போது வேகமாகப் பரவி வரும் புதிய வைரஸ் குறித்த உறுதியான ஆய்வு முடிவுகள் வெளியாகும் வரை இரண்டு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுமாறு பொதுமக்களுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பியல் மற்றும் மூலக்கூறு மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர அறிவுறுத்தியுள்ளார்.

☞2

## கர்ப்பிணிகளைத் தாக்கும் புதிய வைரஸ்!

### சிறிய அறிகுறிகள் தோன்றினாலும் பரிசோதனை செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தல்

நாட்டில் பரவி வரும் திரிவு அடைந்த புதிய கொரோனா வைரஸ் கர்ப்பிணிப் பெண்களிடையே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது என மகப்பேறியல் நிபுணர் மயுரம்மன டெவொலகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் நுரையீரலைக் கடுமையாகப் பாதிக்கும் நிலையில் கர்ப்பிணித் தாய்மார்களிடையே அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது

☞2

## வடக்கில் மேலும் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவருக்கும், மன்னார், வவுனியாவில் தலா ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் மேலும் நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர்

☞2

## மேலும் 260 கைதிகளுக்குக் கொரோனா; இரு வாரங்களுக்குப் பார்வையிடத் தடை

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 260 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புதிதாக சிறை வைக்கப்படும் கைதிகளிலேயே அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சந்தன ஏக்கநாயக்க

☞2

## யாழ்.நாச்சிமார் கோவில் ஆலய நிர்வாகிகள் கைது

### சுகாதார விதிமுறைகளை மீறினராம்

யாழ்ப்பாணம் நாச்சிமார் ஆலயத்தில் கொவிட்-19 கட்டுப்பாட்டு விதிகளை மீறி தேர்த் திருவிழாவை நடத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் தலைவரும், செயலாளரும் பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ்

☞2

## ரிஷாத் போல இன்னும் பலர் கைதாகலாம்!

### அமைச்சர் லொக்குகே கூறுகிறார்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் கைதுக்குப் பின்னால் எந்தவொரு அரசியல் நோக்கமும் இல்லை என போக்குவரத்து அமைச்சர்

☞2

## 100 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன

இலங்கையில் சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றுப் பரம்பல் காரணமாக 7 மாவட்டங்களில் 100 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளதன் மூலம் நெருக்கடி நிலை அதிகரித்துள்ளது.

திருகோணமலை, குருநாகல், களுத்துறை, கம்பஹா, காலி, பொலன்னறுவை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராம சேவகர்கள் பிரிவுகளே இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் 87 கிராம சேவகர் பிரிவுகள் குருநாகல்

☞2

## சீன பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வந்தடைந்தார்



சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் ஃபெங் (Wei Fenghe) நேற்று மாலை இலங்கை வந்தடைந்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வருகை

☞2

# சுகாதார நடைமுறைகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை



## வடக்கு மாகாண ஆளுநர் எச்சரிக்கை

(வவுனியா நிருபர்)

சுகாதார வழிமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளார் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றைய அறிக்கையின்படி கொரோனா பரவல் வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரச அதிபர்களூடாக மீளாய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகளும் அவற்றை மீறுபவர்களுக்கு

☞2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.ஜி.ஆர்.– சிவாஜி, கமல் – ரஜினி என்ற வரிசையில் தல – தளபதி என்று அது நீடிக்கின்றது. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தக் கதாநாயகர்களைத் தங்கள் ஆதர்ஷ புருஷர்களாகக் கருதிக் கொள்ளும் ரசிகர்கள், அவர்கள் மீதான விசுவாசத்தில் அவர்களுக்காக உயிரும் கொடுக்கக் கூடத் துடிப்பார்கள். தங்கள் கதாநாயகரைக் கடவுளாக மதிக்கும் ரசிகர்கள் மற்றைய கதாநாயகரின் ரசிகர்களை பரம எதிரிகளாகக் கருதி மோதுவர். இந்த ரசிகர் கூட்டத்தின் சண்டை, சச்சரவு, மோதல் பற்றியெல்லாம் அவ்வப்போது செய்திகள் வரும்.

ஆனால் அந்த ரசிகர்களின் ஆதர்ஷ புருஷர்களான கதாநாயகர்கள் தங்களுக்குள் மோதிக் கெள்ள மாட்டார்கள். சந்திக்கும் இடத்தில் ஆளாளுக்குத் தோளுக்கு மேல் கைபோட்டு அந்நியோன்னியமாகக் கூடிப்பழகிப் பிரிவார்கள். உற்ற நண்பர்களாகவும் இருப்பர்.

இப்போதும் கூட கமல் – ரஜனி நட்புறவு அதற்கு உதாரணம்.

இவ்வளவு வியாக்கியானங்கள், விளக்கங்கள் ஏன் என்று கேட்கின்றீர்களா?

இதே சினிமா ரசிகர்களின் நிலைமைதான் நமது தமிழ் தலைவர்களின் அரசியல் ஆதரவாளர்களுக்கும். கொஞ்சம் கொச்சையாகச் சொல்வதானால் அவர்களின் செம்புகாவிகள் மற்றும் அல்லக்கைகளுக்கும்.

நம் தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்கின்றார்களோ, இல்லையோ அவர்களின் அல்லக்கைகள் சமூக ஊடகங்களில் கழுவி ஊற்றுவதைப் பார்த்தால் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்கள் ஆளாளுக்கு நேரில் சந்தித்தால் ஒருவரை ஒருவர் வெட்டிப் பிடுங்கி விடுவார்கள் என்றுதான் சந்தேகிக்கத் தோன்றும். ஆனால் சினிமா கதாநாயகர்கள் மாதிரி, இந்த அரசியல் தலைவர்களும் நிஜத்தில் அப்படித் தங்களுக்குள் மோதிக் கொண்டிருப்பவர்கள் அல்லர் என்பதுதான் சுவாரசியமான விடயம்.

வெவ்வேறு கட்சித் தலைவர்களுக்கு இடையில் மட்டும் அல்ல, ஒரு கட்சிக்குள்ளும் இப்படி நிலைமை உண்டு.

உதாரணத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா – கட்சியின் துணைச் செயலாளரும் பேச்சாளருமான சுமந்திரன் எம்.பி. முரண்பாடு.

பொதுத் தேர்தலுடன் முற்றிய முரண்பாடு இருவரையும் கீரியும் பாம்புமாக்கி விட்டது என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தோம்.

இரு தரப்பிலும் அல்லக்கைகள், அணி பிரிந்து நின்று சமூக ஊடகங்களில் நடத்தும் திருவிளையாடல் – அலப்பறை – அளவு கடந்தது. போதாக்குறைக்கு நாங்கள் ஊடகங்கள் வேறு எமது கைவரிசையைக் காட்டிக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால், மாவை – சுமந்திரன் தங்களுக்குள் அப்படி முரண்படுகின்றார்களா என்பது கேள்விக்குரியதுதான்.

சுமந்திரனுக்கு எதிராக சம்பந்தன் ஐயாவிடம் மாவை முறைப்பாடு என்றெல்லாம் நானே செய்திகளை வெளிப்படுத்தியிருக்கிறேன்.

ஆனால், கடந்த இரண்டொரு நாள்கள் யாழ்ப்பாணத்தில் நின்ற சுமந்திரனை ஆள் வைத்து நோட்டமிட்டேன்.

கடந்த ஞாயிறு இரவு மாவையரின் மாவிட்டபுரம் வீட்டில் இரவு விருந்து உண்கிறார் சுமந்திரன். அடுத்த நாள் மதியம் இருவரும் யாழ்ப்பாணத்தில் வலம்புரி ஹோட்டலில் மதிய விருந்துடன் கூடிக் குலாவிக் கொண்டிருந்தமையைத் தாம் நேரில் அவதானித்து ஆச்சரியப்பட்டுப் போனார் என்று என் நண்பர் ஒருவர் கூறினார்.

அன்று பகல் யாழில் நடந்த தந்தை செல்வா நினைவு நிகழ்வில் கூட ஒரு விடயம் அவதானிக்கப்பட்டது.

நினைவுரை நிகழ்த்த வந்தவர் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஜெகான் பெரேரா. அவரது ஆங்கில உரையைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு அத்துறையில் நிபுணத்துவம் பெற்ற கல்விமான் ஒருவரை ஒழுங்கு செய்திருந்தனர். அவர் கடைசி நேரத்தில் வரமுடியவில்லை. மாற்று ஏற்பாடாக மேடையில் இருந்த சுமந்திரனிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மேடைக்கு வர முன்னர் சுமந்திரனுக்கோ, கட்சித் தலைவர் மாவைக்கோ, மேற்படி ஜெகான் பெரேரா நிகழ்த்தும் நினைவுரையை சுமந்திரன்தான் மொழி பெயர்க்க வேண்டி நேரும் என்பது தெரிந்திருக்கவில்லை. இறுதி நேரத்தில் மேடையில் வைத்தே கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் செய்த அவசர மாற்று நடவடிக்கை அது.

அதுவல்ல விவகாரம். இனி விடயத்துக்கு வருகிறேன்.

நிகழ்ச்சியில் நினையாப் பிரகாரமாக சுமந்திரனை மொழி பெயர்க்க அழைத்தமையால் இந்த விவகாரம் பெரிதாகத் தோற்றவில்லை. இல்லையேல் விடயம் பூதாகர உரு எடுத்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நிகழ்ச்சிக்கு வந்த சுமந்திரனை ஒற்றைக் காலில் பிடிவாதமாக நின்று தம்முடன் மேடைக்குக் கூட்டிப் போனார் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா. ஆனால் கட்சியின் மற்றொரு யாழ்.மாவட்ட எம்.பியான சிறிதரன் மேடைக்கு அழைக்கப்படவேயில்லை.

உண்மையில் பார்த்தால், வரும் மாகாண சபைத் தேர்தலில் கட்சித் தலைவரான மாவை சேனாதிராசாவை முதல்வர் வேட்பாளராக அறிவிப்போம் எனக் கூறிவரும் – தனக்காகக் குரல் எழுப்பும் – சிறிதரன் எம்.பியைத்தானே மேடைக்கு மாவை சேனாதிராசா அழைத்திருக்க வேண்டும்?

ஆனால், சிறிதரன் எம்.பி. பார்வையாளர் வரிசையில் இருக்க, சுமந்திரனைத் தன்னுடன் இழுத்துச் சென்று மேடையில் அமர்த்தியிருக்கின்றார் மாவை.

அங்கு வைத்துத்தான் கடைசி நேரத்தில் சுமந்திரனிடம் மொழி பெயர்க்கும் கோரிக்கையை குலநாயகம் முன்வைத்தார். சுமந்திரன் ஒப்புக் கொண்டார். அதனால் மொழி பெயர்ப்புக்காகவே சுமந்திரனை மேடைக்கு அழைத்தோம் என்று சாட்டுச்சொல்ல மாவை தரப்புக்கு ஒரு நியாயம் கிடைத்துவிட்டது.

அது சரி, மாவை – சுமந்திரன் இந்தப் புதிய ஒட்டுறவுக்குக் காரணம் என்ன?

அவர் இவரிடம் சரணடைந்து விட்டாரா, அல்லது இவர், அவர் வலையில் மடங்கி விட்டாரா?

ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

ஆனால், என் நண்பன் ஒருவன் வேறு மாதிரிக் குற்றம் சுமத்தினான்.

"உங்கள் பேனாக்களின் 'முடிந்து விடும்' வலிமை முடங்கி விட்டது. அதை மீறி நல்லுறவு துளிர்த்து விட்டது" – என்று நம் தலையில் தகைமையீனக் குற்றச்சாட்டைப் போடுகிறான் அவன். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

–மின்னல் –

---

## வடக்கில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 499 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே, நால்வருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்த நோயாளர் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா பூவரசம்குளம் பிரதேச வைத்தியசாலையிலும் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது – என்றார்.

---

## சீன பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தந்துள்ள அவர், ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலின் பின்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் சீனாவின் இரண்டாவது சிரேஷ்ட அதிகாரி இவர் ஆவார்.

இதற்கு முன்னர் கடந்த ஒக்டோபரில் சீனாவின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் யாங் ஜீச்சி நாட்டுக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார நடைமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் படியும் அறுவுறுத்தல்களை வழங்கியுள்ளேன் – என்றார்.

---

## ரிஷாத் போல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இப்படி இன்னும் பலர் கைது செய்யப்படலாம் எனத் தெரிவித்த அமைச்சர் காமினி லொக்குகே, விசாரணைகள் சுயாதீனமாகவே இடம்பெற்று வருகின்றன எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை ரிஷாத் பதியூதீனின் கைது வெறும் அரசியல் பழிவாங்கலே என்று எதிர்கட்சியினர் முன்வைத்து வருகின்ற குற்றச்சாட்டையும் அமைச்சர் முற்றாக நிராகரித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். இதன்போது மேலும் உரையாற்றிய அவர் –

ஈஸ்டர் தாக்குதல் பற்றிய விசாரணைகளை புலனாய்வுப் பிரிவிடம் நாங்கள் ஒப்படைத்திருக்கின்றோம். அதில் அரசாங்கத்தின் தலையீடுகள் எதுவும் இல்லை. அவர்கள் இன்று விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்டவர்களைக் கண்டுபிடிப்பது அரசாங்கத்தின் கடமையென்பதோடு மக்களும் அதனையே எதிர்பார்த்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவுக்கும், சட்டமாஅதிபருக்குமே கைதுகளை செய்வதற்கான அதிகாரம் உள்ளது. இந்த விவகாரத்தில் எந்தவொரு அரசியல் பழிவாங்கலும் இல்லை.

இதனை அரசியல் பழிவாங்கல் என்று கூறுகின்ற தற்போதைய எதிரணியினர் ஆளுங்கட்சியாக இருந்தபோது மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்கள், அமைச்சர்கள் என பலரையும் சிறையில் அடைத்தார்கள். ஆனால் அதே பாணியில் நாங்கள் பயணிக்கமாட்டோம்.

அதேபோல தற்போதைய அரசாங்கமே இந்தத் தாக்குதலையும் நடத்தியதாக சிலர் விமர்சிக்கின்ற போதிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான அசோக அபேசிங்க இதுபற்றி தெரிவித்திருந்த சந்தர்ப்பத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது அங்கு வந்து மன்னிப்புக் கேட்டார். இதுவே இன்றைய எதிர்கட்சியின் நிலையாகும்.– என்றார்.

---

## இலங்கையில் தீவிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்தியாவில் பரவல் அடைந்துவரும் கொரோனா வைரஸின் மாறுபாடு இலங்கையில் பரவி வருகின்றது என்பதற்கு இதுவரை எந்தவிதமான உறுதியான ஆதாரங்களும் இல்லை. இந்தப் புதிய வைரஸ் குறித்து முழு மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின் அடுத்த வாரம் சரியாகக் கூற முடியும்.

இந்தியாவில் பரவல் அடைந்துவரும் வைரஸ் இலங்கைக்குள் பரவ வாய்ப்புள்ள போதிலும் இதற்கான சாத்தியக்கூறுகளை குறைக்க சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.

இதேநேரம் இந்த வைரஸ் நாட்டில் ஏற்கனவே பரவி வரும் வைரஸின் புதிய மாறுபாடாக கூட இருக்கலாம் என பரிசோதனைகள் காட்டுகின்றன.

பண்டிகைக் காலத்துக்குப் பிறகு கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டி பகுதிகளிலிருந்து பெறப்பட்ட கொரோனாத் தொற்று மாதிரிகளில் இது போன்ற பிறழ்வை அவதானிக்க முடிந்தது.

எவ்வாறாயினும் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்றுவதன் மூலம் புதிய வைரஸ் நாட்டில் மேலும் பரவுவதைத் தடுக்க முடியும் – என்றார்.

---

## கர்ப்பிணிகளைத் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுவரை நாட்டில் 3 கர்ப்பிணித் தாய்மார்கள் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனாத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் சிறிய அறிகுறிகள் தோன்றினாலும் கொரோனா பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் எனவும் மகப்பேறியல் நிபுணர் மயுரம்மன டெவொலகே அறிவுறுத்தியுள்ளார்.

---

## 100 கிராம சேவகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தின் குளியாப்பிட்டி காவல்துறை அதிகார பிரதேசத்தில் அடங்கியுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் மீகஹ தென்னை காவல்துறை அதிகார பிரதேசத்தில் மிரிஸ்வத்தை, பெலவத்தை வடக்கு, பெலவத்தை கிழக்கு மற்றும் களுத்துறை தெற்கில் அதிகாரிகொடை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் பூம்புகார் கிராம சேவகர் பிரிவை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

கம்பஹா மாவட்டத்தில் பொல்ஹேன, ஹீரலுகெதர, களுவக்கல, அஸ்வென் தென்னை கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தில், ரத்கம காவல்துறை அதிகார பிரதேசத்தில் இம்புல்கொடை மற்றும் கடுதம்பே ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் நேற்று முந்தினம் இரவு முதல் தனிமைப்படுத்தப்பட்டன.

மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை காவல்துறை அதிகார பிரதேசத்தில், பல்லேகும்புர கிராம சேவகர் பிரிவும், பொலன்னறுவை மாவட்டத்தில் ஹிங்குரக்கொடை காவல்துறை அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட சிறிகெத கிராம சேவகர் பிரிவும் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

---

## யாழ்.நாச்சிமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரவலை ஏற்படுத்த வழிசமைத்த குற்றச்சாட்டில் அவர்கள் மீது  மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுள்ளது. அதனால் இருவருக்கும் நேற்று இரவு பொலிஸ் பிணை வழங்கப்படவிருந்தது. யாழ்ப்பாணம் நாச்சிமார் ஆலய வருடாந்திர பெருந் திருவிழா இடம்பெற்று வருகிறது. திங்களன்று தேர்த்திருவிழா இடம்பெற்றது.

நாட்டில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய 50 பக்தர்களுக்கு மட்டுமே ஆலயத்தில் ஒரே நேரத்தில் வழிபட அனுமதிக்கப்படும் என சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## மேலும் 260 கைதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமாக பரவலடைந்து வருகின்ற நிலையில் சிறைச்சாலைகளில் 260 வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில் கைதிகளின் உறவினர்கள் அவர்களை பார்வையிட வரும்போது கைதிகள் ஒன்றுகூடுவதால் வைரஸ் பரவல் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது என்பதால், இரு வாரங்களுக்குக் கைதிகளைப் பார்வையிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிதாக சிறைவைக்கப்படும் கைதிகள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குட்படுத்தப்படுகின்றனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுபவர்கள் சிகிச்சைக்காகக் கந்தக்காடு சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், ஏனையவர்கள் தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்ததுடன், உரிய சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

ஏற்கனவே சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது.

இதேவேளை, கட்டாயம் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய கைதிகள் மாத்திரமே நீதிமன்ற விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

ஏனையவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் காணொலி தொழிநுட்பத்தின் ஊடாக இடம்பெற்று வருகின்றன – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டம் முடக்குவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இதுவரை கிடையாது

## அரச அதிபர் க.மகேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்ப்பாணத்தை தற்போது முடக்குவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் க.மகேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

யாழில் கடந்த திங்கட்கிழமை மாத்திரம் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதாவது ஒக்டோபர் மாதத்துக்குப் பின்னரான காலப்பகுதியில், 1201 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று யாழ்ப்பாணத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 708பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை19பேர்குறித்ததொற்றால்உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் நேற்றுவரை ஆயிரத்து 253 குடும்பங்களைச் சேர்ந்த 3,416 பேர், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆகவே சுகாதார நடைமுறைகளைப் பொதுமக்கள், அரச தனியார் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைவரும்கடைப்பிடித்து, தங்களதுசெயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தை முடக்குவது தொடர்பாக தீர்மானம் இல்லை. ஆனாலும் அரசாங்கம், கொரோனா அச்சுறுத்தல் அதிகம் காணப்படும் மாவட்டங்களிலுள்ள சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளது.

அத்தகையதொரு நிலைமை யாழ்ப்பாணத்திலும் ஏற்படுமாயின் முடக்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படலாம்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொள்ளுப்பிட்டி பொதுச் சந்தை காணி குறித்து வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஏப்.28

கொள்ளுப்பிட்டி பொதுச் சந்தை அமைந்துள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொள்ளுப்பிட்டி சந்தை வளாக அபிவிருத்தி தொடர்பான உத்தேச திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் கடந்த 2021.03.12 அன்று அலரி மாளிகையில் வெளியிடப்பட்டது.

தற்போது கொள்ளுப்பிட்டிய சந்தை அமைந்துள்ள இடத்தில் 39 மாடியிலான புதிய சந்தையுடன் கூடிய குடியிருப்புக் கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகள் முழுமையாகச் சந்தைத் தொகுதிக்காக ஒதுக்கப்படும்.

எட்டாவது மாடியில் இருந்து மேல்நோக்கி இரண்டு கோபுரங்களில் கட்டப்படும் 30 மாடிகள் சொகுசு குடியிருப்புக் கட்டடங்களைக் கொண்டதாக அமையும்.

புதிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் சில மாம்பழங்கள், பழங்கள் அல்லது காய்கறிகளை விற்க விரும்பும் எவருக்கும் இடம் உண்டா என்று பிரதமர் வினவினார்.

பழங்கள் மற்றும் காய்கறிகளின் விற்பனைக்கு இங்கு ஒரு சிறப்பு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

அதற்கமைய, சாதாரண வர்த்தகர்கள் தங்கள் விளைபொருள்களை விற்பனை செய்வதற்கு புதிய சந்தை வளாகத்தில் நிச்சயமாக இடம் ஒதுக்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

இப்புதிய சந்தை வளாகத்தை சுற்றுலா தளமாகவும், உள்ளூர் உணவு கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

தற்போது 30 – 40 வாகனங்கள் மாத்திரமே இங்கு நிறுத்தக்கூடியதாக உள்ள போதிலும், இந்த உத்தேச திட்டத்தின் ஊடாக 348 வாகனங்களை நிறுத்தக்கூடிய வகையிலான வாகன நிறுத்தமொன்று நிர்மாணிக்கப்படும்.

கொள்ளுப்பிட்டிய சந்தை வளாக அபிவிருத்தி திட்டம் தொடர்பாக டிசைன் ஒன் முகாமைத்துவ பணிப்பாளர் சிரேஷ்ட கட்டடக் கலைஞர் தனஞ்சன அமரசேகர விளக்கினார். கொழும்பு மாநகர சபையின் ஒப்புதலைத் தொடர்ந்து, உத்தேச திட்டம் ஒப்புதலுக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. மூன்று ஆண்டுகளில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படும் புதிய திட்டத்திற்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அடிக்கல் நாட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு மாநகரசபை மற்றும் முதலீட்டு நிறுவனம் ஆகியன இணைந்ததாக இந்தப் புதிய திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

# பிரபல கஞ்சா வியாபாரி வாழைச்சேனையில் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறந்துரைச்சேனையில் பிரபல கஞ்சா வியாபாரி ஒருவரை கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை இராணுவப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸாருடன் இணைந்து சம்பவ தினமான கடந்த திங்கட்கிழமை இரவு குறித்த வியாபாரியைப்பின்தொடர்ந்தவேளையில் கஞ்சாவை விற்பனை செய்ய முயன்ற போது இக்கைது இடம்பெற்றுள்ளது. மேற்படி வியாபாரி நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த 42 வயதுடைய நபர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அரச வைத்தியசாலைகளில் போதுமான ஒக்சிஜன் உண்டு

இலங்கையின் அரச வைத்தியசாலைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் ஒக்சிசன் போதுமானளவு இருக்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில்தொடர்ந்தும்கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டு வரும் நிலையில் முழுமைத்தயார்நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சும் அரச வைத்தியசாலைகளில் கிடைக்கும் ஒக்சிஜன் விநியோகம் தொடர்பான தகவல்களைக் கோரியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெரனாண்டோபுள்ளேயின் தகவல்படி நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின், எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருகின்றது.

இதில் பெரும்பாலானோர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்படுகின்றனர். நிலைமையைச் சமாளிக்க மேலதிகமாக 70 கட்டில்கள் சேர்க்கப்படவுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டார்.

# வழிபாட்டுத் தலங்களில் சுகாதார நடைமுறை கடைப்பிடிக்கப்படாதமை வருத்தமளிக்கின்றது

## யாழ்.அரச அதிபர் வேதனை

யாழ்.மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமை கவலையளிக்கின்றது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய கொரோனா நிலைமையில் அரசாங்கத்தால் புதிய சுகாதார நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வழிபாட்டு இடங்களில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டு இடங்களில் இந்த நடைமுறையை பொதுமக்கள் அனுசரித்துச் செல்லவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த அலட்சியத்தை விடுத்து சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்யாது பொதுமக்கள் செயற்படவேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த சுகாதார நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே ஆலயங்களில் 50 பேருக்கு மேல் ஒன்று கூடுவதைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வழிபாட்டு இடங்களில் இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது. – என்றார்.




‘தாயகம்’ அறக்கொடை நம்பிக்கை நிதியத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவர்களுக்கும் தெல்லிப்பளை வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கும் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான காலணிகள் மற்றும் சீருடைகளும் வழங்கப்பட்டன. ‘தாயகம்’ அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகர் வீ.ஶ்ரீதரன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்புக் காவலில் ரிஷாத்

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைக் குண்டுதாரிகளுக்கு உதவி, ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை மூன்று மாதங்களுக்கு – 90 நாள்களுக்கு – குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து பொலிஸார் பெற்றிருக்கின்றனர் என்று தகவல் வெளியாகியிருக்கின்றது.**

**அதாவது, ரிஷாத் பதியுதீனையும் அவர் சகோதரர் ரியாஜ் பதியுதீனையும் மூன்று மாதங்களுக்குத் தடுத்து வைத்திருப்பதற்கான தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டிருக்கின்றது.**

**ரிஷாத்தின் கைதை ஒட்டி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ள ஒரு விடயம் கவனிக்கத்தக்கது.**

**இதுவரை பகிரங்கமாகக் கொழும்பில் குடும்பத்துடன் வாழும் ரிஷாத் எம்.பியை, அதிகாலை அமைதியை ஊடறுத்து, அவரது வீட்டைச் சுற்றிவளைத்து ஒரு பாதாள உலகக் கோஷ்டியை இழுத்துச் செல்வதைப் போல கொண்டு சென்றமையின் மூலம் இந்த அரசு எமக்குச் சொல்கின்ற செய்தி என்ன? தன் மீது குற்றஞ்சாட்ட சாட்சியங்கள் இருந்தால் தன்னை விசாரியுங்கள் என ரிஷாத் எம்.பியே பல முறை கூறியுள்ளார்.**

***"ஆனால் எதிர்க்கட்சியில் இருக்கும் போது தினசரி வரிசையாக வந்து, ரிஷாத்துக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடுகளைச் செய்து விட்டு, பின் ஊடகங்களில் அவருக்கு எதிராக வசைபாடிவிட்டு, சாட்சியங்கள் இருக்கின்றன எனக் கூறிவிட்டு, இந்தத் தாக்குதல்களுக்குப் பொறுப்பான சூத்திரதாரிகளை தாம் ஆட்சிக்கு வந்ததும் ஒரே மாதத்தில் தூக்கிப் போடுவோம் எனவும் கூறி விட்டு, ஆளும் கட்சியாக மாறிய பின்னர், சுமார் இரண்டு வருடங்களுக்கு சும்மா இருந்து விட்டு, இப்போது நௌபர் மௌலவி என்பவரே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரி என அறிவித்தும் விட்டு, இப்போது ரிஷாத்தை இப்படி நடுநிசியில் கைது செய்திருக்கின்றது இந்த அரசு"*** **– எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் மனோ கணேசன் எம்.பி.**

**இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மிருகத்தனமான – கொடூரமான – நாகரிகமேயற்ற – அரக்கத்தனமான – பண்பியல்புகளையும் குரூர வகையையும் முஸ்லிம் தலைவர்களும் நேரடியாக அனுபவித்துப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை இன்றைய நிலைமை ஏற்படுத்தியிருக்கின்றது.**

**இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு கட்டுமட்டில்லா அதிகாரங்களை வழங்கும் மிக மோசமான இருபதாவது அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளுக்கு ஆதரவளித்து, அதை நிறைவேற்ற பின்கதவால் ஒத்துழைத்த ரிஷாத்தின் கட்சி எம்.பிக்களுக்கும், அவர்களை அதற்கு அனுமதித்து பார்த்திருந்த ரிஷாத்துக்கும் அத்தகைய அதிகாரக் குவிப்புப் பாவத்துக்கு ஒத்துழைத்தமையின் பரிசு யாது என்பதைப் புரிய ஒரு சந்தர்ப்பம் இப்போது கிட்டியிருக்கின்றது.**

**பௌத்த, சிங்களவர்கள் அல்லாத சிறுபான்மையினரையும், அவர்களின் தனித்துவத்தையும், சமுதாயச் செழுமையையும், கௌரவ வாழ்வையும் அழித்தொழிப்பதில் கண்ணாயிருக்கும் பேரினவாதத்துக்குத் தொடர்ந்தும் தெரிந்தோ, தெரியாமலேயோ துணை போன முஸ்லிம் தலைவர்கள் தீர்க்கமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய இறுதித் தருணத்துக்கு வந்து விட்டார்கள் என்பதையே ரிஷாத் பதியுதீன் எம்.பி. கைது செய்யப்பட்ட முறைமையும், விதமும் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.**

**மூன்று மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றமையால் ரிஷாத் எம்.பியின், நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோகுமா என்ற கேள்வி எழுகின்றது. தடுப்புக் காவலில் இருப்பதால் அக்காலத்தில் அவர் நாடாளுமன்றத்துக்குச் சமுகம் தராமல் போக அவரின் பதவி பறிபோகும் என்று சில தரப்புகள் கருதலாம்.**

**ஆனால், நிலைமை அப்படியல்ல. ரிஷாத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை. அவர் சந்தேக நபர்தான். சந்தேக நபர் என்ற பேரில் தடுத்து வைத்திருப்பதன் காரணமாக அவரின் நாடாளுமன்றப் பிரசன்னத்தை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் தடுத்து விடமுடியாது. அவரை நாடாளுமன்ற அமர்வு காலத்தில் நாடாளுமன்றுக்குக் கூட்டி வந்தேயாக வேண்டும்.**

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலிருந்த செல்வராசா யோகச்சந்திரன் (குட்டிமணி) வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பியாக நியமிக்கப்பட்டும் அவர் பதவியேற்க நாடாளுமன்றுக்குக் கூட்டி வரப்படவில்லை. அப்போது தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்ட தண்டனைக் கைதி அவர்.**

**அது வேறு நிலைமை. ரிஷாத்தின் நிலைமை வேறு. அவர் நாடாளுமன்ற அமர்வு சமயம் சபைக்குக் கூட்டி வரப்படுவார். கூட்டி வரப்பட வேண்டும். குற்றத் தீர்ப்பு ஏதும் அறிவிக்கப்படும் வரை அவரது எம்.பி. பதவி பாதிக்கப்படமாட்டாது.**

## புலம்பெயர் அமைப்பை தடை செய்யும் மற்றொரு பட்டியல் உளவுத்துறையிடம்!

### மனித உரிமை ஆர்வலர் ச.வி.கிருபாகரன் தெரிவிப்பு



தனிநபர்களையும் புலம்பெயர்ந்தோர் அமைப்பையும் தடை செய்யும் கோட்டாபயவின் புதுப்பிக்கப்பட்ட பட்டியல் நன்கு அறியப்பட்டதாகும். இதற்கிடையில், மற்றொரு பட்டியல் இராணுவ உளவுத்துறை மற்றும் ஒட்டுகுழு உறுப்பினர்களான டக்ளஸ், கருணா, பிள்ளையான் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் சில முன்னாள் ஒட்டு குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என அறிகிறோம். இதனது நோக்கம் என்ன? – என பிரான்ஸிலிருக்க கூடிய மனித உரிமைகள் ஆர்வலர் ச.வி.கிருபாகரன் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோ ஒருமுறை கூறினார் – சர்வாதிகாரம் இயல்பாகவே ஜனநாயகத்திலிருந்து உருவாகிறது. மேலும் மிகக் கடுமையான கொடுங்கோன்மை மற்றும் அடிமைத்தனம் மிகவும் தீவிரமான சுதந்திரமெனும் தாகத்தைத் தூண்டுகிறது. மக்களின் கோரிக்கை, வேண்டுகோள்களை அரசியல்வாதிகள், நாடுகளின் தலைவர்கள் புறக்கணிக்கத் தொடங்குகிறார்களோ அன்று – பிரச்சினை ஆரம்பமாகி இறுதியில் ஒரு மோதலில் முடிகிறது.

இறையாண்மை, ஒருமைப்பாடு பற்றி கடுமையாகப் பேசும் நாடுகளின் தலைவர்கள் வெளிநாட்டுச் சக்திகளைத் தங்கள் நாட்டுக்கு அழைத்து போரை வென்ற பின்னர், நாங்கள் போரை வென்றோம், நாங்கள் போரின் கதாநாயகர்கள் எனப் போலியாகக் கூறுவார்கள். வெளிநாட்டுச் சக்திகள் தங்கள் நாட்டில் ஏற்கனவே இருந்தன என்பதையும், அவர்களின் இறையாண்மையும் ஒருமைப்பாடும் பற்றிப் பேசும் அதே அரசியல்வாதிகளால் மீறப்பட்டவை என்பதையும் தெரியாத சாதாரண மக்கள், ராஜபக்ஷக்களை தமது நாட்டின் தேசபக்தர்களாக, விசுவாசிகளாக நம்புகிறார்கள். – என்றுள்ளது.

## அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்தார் ஹரின்



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் நடத்தப்படுகின்ற விசாரணைகளுக்காக வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியுள்ளதால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருகை தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணாண்டோவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஹரின் பெர்னாண்டோ உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே ஹரின் பெர்னாண்டோ தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

## ரிஷாத்தின் கைது கண்டனத்துக்குரியது கிண்ணியா நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனின் அவர்களின் கைது மன வேதனையானதும் கண்டனத்துக்குரியதும் என மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகரசபை உறுப்பினருமான எம்.எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிண்ணியாவிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்–

மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் அவை நிறைவேற்றப்படாத நிலையில் துறைமுக நகரம், சீனி இறக்குமதி, கொரோனா அனர்த்தம், ஈஸ்டர் தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் தற்போது பெரும் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஆளாகியுள்ளதோடு அரசாங்க கூட்டணிக்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

இவற்றை திசை திருப்புவதற்காகவும் பெரும்பான்மை மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகவுமே இவ்வாறான கைதுகள் அரங்கேற்றப்படுகின்றன என பல்வேறு கருத்துகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ரிஷாத் பதியுதீன் மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் திணைக்களம், ஆணைக்குழுக்கள், நீதிமன்றங்கள் போன்ற பல்வேறு பிரிவுகளில் விசாரணைகள் நடைபெற்றன.

அந்த விசாரணைகளுக்கு அவராலும் அவரது குடும்பத்தினராலும் பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்ட போதிலும் அவர் மீதான எந்த குற்றச்சாட்டுகளிலும், அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்படவில்லை. ஆனாலும் சென்ற வருடம் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்.

மேலும் அவர் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் தான் விடுபட வேண்டும் என்பதற்காக அனைத்து விசாரணைகளையும் விரைவுபடுத்துமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அண்மையில் மனு மூலமான கோரிக்கையும் விடுத்திருந்தார்.

ஈஸ்டர் தாக்குதலோடு எந்தச் சம்பந்தமும் இல்லாமல் இருந்தும் வேண்டுமென்று நோன்பு நோற்கத் தயாராக இருந்த வேளை சட்ட நியதிகளுக்கும் மனித நேயத்திற்கும் அப்பால் அவர் கைது செய்யப்பட்ட முறைமையானது மனிதாபிமானமற்ற, மன வேதனையான கண்டனத்திற்குரிய செயலாகும்.

ஒரு கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தும் இவ்வாறான கைதுகள் இந்நாட்டின் ஜனநாயகம், சட்டவாட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எனவே ரிஷாத் பதியுதீன் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதோடு மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கும் ஜனாதிபதியும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அரசியல் உரிமை கிடைக்கும் வரை போராடுவேன்

## இரா.சாணக்கியன் சபதம்

தந்தை செல்வாவின் தமிழ் மக்களுக்கான போராட்டத்தை மூன்றாவது தலைமுறையாகவும் முன்கொண்டுசெல்வோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 44 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு களுவாஞ்சி குடியில் மாபெரும் இரத்ததான நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கிடைக்கும் வரையில் தமிழ் மக்களின் உரிமைக்காக நாடாளுமன்ற உறுப்பினராகவும் இளைஞராகவும் தொடர்ந்து போராடுவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# நுவரெலியாவில் கொவிட் விதி மீறல்: மாநகரசபை விசாரணைக்கு உத்தரவு

நுவரெலியா மாநகர சபையால் கொவிட் தனிமை விதிகள் மீறப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. இதற்காக குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

தமிழ் – சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நுவரெலியா மாநகரசபை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுகள் மூலம் கொவிட் தடுப்பு விதிகள் மீறப்பட்டுள்ளன என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகேயின் தகவல்படி இந்த நிகழ்வுகள் கொவிட் தனிமை விதிகளை மீறியுள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மாநகரசபையின் ஊழியர்கள் அவர்கள் பகல் போசனத்துக்காக 175 மில்லிலீற்றர் மதுபானத்தை விநியோகித்தமை மற்றும் கிரகரி வாவிக்கு அருகில் களியாட்ட நிகழ்வை நடத்தியமை, இந்த நிகழ்வின்போது பலர் ஒரு மீற்றர் தூரத்தைக் கடைப்பிடிக்காமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

# நிர்வாக ஊழல்களால் கிரிக்கெட் துறை வீழ்ச்சி

## அர்ஜுன ரணதுங்க கவலை



கொழும்பு, ஏப்.28

இலங்கை கிரிக்கெட் அணியில் சிறந்த வீரர்கள் இருந்தும் நிர்வாகத்தில் ஊழல்வாதிகள் உள்ளதால் கிரிக்கெட் அணி பாரிய வீழ்ச்சியைக் கண்டு வருகின்றது என முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கவலை தெரிவித்துள்ளார்.

கல்குடா பாசிக்குடாவில் உள்ள விடுதியொன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை கிரிக்கெட் அணியில் நான் தலைமைத்துவம் வகித்த சமயத்தில் நிர்வாகத்தில் சிறந்தவர்கள் இருந்தார்கள். இதன் மூலம் எங்களது திறமைகளை வெளிக்கொணர்ந்து உலக கிண்ணத்தைக் கைப்பற்றினோம். ஆனால் தற்போது இலங்கைக் கிரிக்கெட் அணியில் சிறந்த வீரர்கள் இருந்தும் கிரிக்கெட் நிர்வாகத்தின் ஊழல்வாதிகள் அதிகம் உள்ளமையால் இலங்கை கிரிக்கெட் அணி பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றது.

எனவே இதில் விளையாட்டு அமைச்சர் கூடிய கவனம் செலுத்தி கிரிக்கெட்டை முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நான் தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கி உள்ளேன். தனக்கு அரசியலில் மீண்டும் பிரவேசிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும் போது அரசியலில் மீண்டும் நிச்சயம் பயணிப்பேன்.

நாட்டில் அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக சீர் செய்யும் வகையில் எனது நிறுவனமான டெக்கோ டெக்னோலோஜி ஸோலார் கம்பனியை ஆரம்பித்து சோளார் இணைப்பை வழங்கி வருகின்றேன்.

உலகத்தில் உள்ள முதல்தர சோளார் நிறுவனத்திடம் ஸோலார் பெற்று இலங்கை மின்சார சபையினரின் அனுமதியுடன் ஸோலார் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இலங்கையில் பல்வேறு மாவட்டங்களில்ஸோலார் விற்பனைநிலையங்களைத் திறந்து வைத்துள்ளேன்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் ஸோலார் இணைப்பை ஏற்படுத்தி தங்களுக்கான மின்சார பாவனையைப் பெற்றுக்கொள்வதுடன், மின்சார சபைக்கு மின்சாரத்தை வழங்கி இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். – என்றார்.

# தமிழர் தொடர்பில் பிரித்தானியாவின் கருத்து உண்மைக்குப் புறம்பானது

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் காட்டம்

கொழும்பு, ஏப்.28

பிரித்தானியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தமிழர்களிடத்தில் ஆதரவில்லையென அந்நாட்டு அரசு தரப்பு கூறிய கருத்து உண்மைக்கு புறம்பானது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் பிரித்தானியாவில் வாழும் தமிழர்கள், தங்களது உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் வி.உருத்திரகுமாரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

விடுதலைப் புலிகளை பயங்கரவாதத் தடைப்பட்டியலில் தொடர்ந்து வைத்திக்கும் பிரித்தானிய உள்துறை அமைச்சரின் செயற்பாடு



சட்டத்துக்கு முரணானது என தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கான மேன்முறையீட்டு ஆணையகம் தனது முதல் தீர்ப்பில் (ஒக்ரோபர் 21 – 2020) குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் மேன்முறையீட்டு ஆணையகம் தனது 2ஆவது கட்டத்தீர்ப்பில், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக மீள்பரிசீலனை செய்வதற்கு,90 நாள்கள் பிரித்தானிய அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

தடையை நீக்கும் விடயத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சட்டரீதியான போராட்டத்தின் ஊடாக முதல்கள வெற்றியையும் கண்டுள்ளது.

ஆகவே, அந்த வெற்றயை அரசியல் ரீதியான வெற்றியாக்குவது பிரித்தானிய வாழ் மக்களுடைய பொறுப்பாகும்.

மேலும் தமது தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத்தடையை நீக்க கோரும் தமது விருப்பை பிரித்தானிய வாழ் தமிழர்கள் வெளிப்படுத்த வேண்டியது தற்போதைய தேவையாகக் காணப்படுகின்றது.

அதாவது ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழுத்தம், உள்துறை அமைச்சரை நோக்கி கொண்டுச் செல்லப்படும்.

தடை நீக்கத்திற்கான தமது விருப்பினை வெளிப்படுத்த வேண்டியது தமிழர்கள் ஒவ்வொருவரினதும் வரலாற்றுக் கடமையாகும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பஸ்களின் எண்ணிக்கையை யாழில் அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தி யுள்ளதாக மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் வெளிமாவட்டங்களில்கடமையாற்றும்ஆசிரியர்களின்போக்குவரத்துத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கொவிட் – 19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் வழிகாட்டலில் பஸ்களின் ஆசனங்களுக்கு அமையவே பயணிகளை அனுமதிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் அதிகாலை பஸ் சேவைகளைப் பயன்படுத்துகின்றனர்.

அதனால் ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் என பஸ்களில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையைவிட அதிகமானோர் ஏற்றப்படுகின்றனர்.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் அரச ஊழியர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்காக சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களின் எண்ணிகையை அதிகரிக்க வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு அறிவுறுத்தியுள்ளதாக மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

# யாழ். மற்றும் புறநகர் பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் படையினர்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மற்றும் புறநகர் பகுதிகளிலுள்ள பிரதான சந்திகளில், தீவிர கண்காணிப்புப் பணியில் இராணுவத்தினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பணிக்காக கொக்குவில் சந்தியில், தகர கொட்டகை முகாம் ஒன்றினையும் அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முகக்கவசத்தை உரியமுறையில் அணியாதவர்களை எச்சரித்து, உரிய முறையில் அணியுமாறும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறும் மக்களை அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ளமை காரணமாக மக்களை பாதுகாக்கும் பொருட்டே இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்குள் மீண்டும் மலேரியா

முன்சி பஸ்றி

உலகில் அபாயகரமான நோய்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. நாமும் அவற்றைத் துரத்தியடிக்க எம்மால் முடிந்தவற்றைச் செய்து கொண்டுதான் இருக்கின்றோம். அந்தவகையில் மலேரியா என்பது உயிருக்கு ஆபத்தான தொற்று நோய் ஆகும். இது ஒட்டுண்ணிகளால் ஏற்படுகின்றது. பாதிக்கப்பட்ட பெண் அனோபிலஸ் எனும் நுளம்புகள் இதை மக்களிடையே பரப்புவதில் தீவிரமாகச் செயற்படும்.


மலேரியாவின் அறிகுறிகள் நுளம்பு கடித்து 10 – 15 நாள்களுக்குப் பின்னரே தோன்றும். ஆரம்பத்தில் இலேசான அறிகுறிகளாக காய்ச்சல், தலைவலி மற்றும் குளிர் தாங்க முடியாத உடல் நிலை போன்ற மாற்றங்கள் ஏற்படும். இவை கடுமையான நிலைக்கு அதிகரிக்கும்போது வலிப்பு, கோமா மற்றும் மரணம் என்பவற்றைச் சம்பவிக்கச் செய்யும்.

5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், எய்ட்ஸ் நோயாளிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் மற்றும் பயணிகள் ஆகியோரே மலேரியா என்ற இந்த வைரஸின் பிடிக்குள் அதிகம் இலக்காகுகின்றார்கள்.

மனிதனுக்கு ஏற்படக்கூடிய மலேரியாவில் நான்கு வகைகள் உள்ளன. பிளாஸ் மோடியம் விவாகஸ், பி மலேரியா, ஒவலே பி ஃபால்ஸிபாரம் மற்றும் பி விவாகஸ் ஆகியவை சாதாரணமாகச் சூழலில் காணப்படக்கூடிய மலேரியா வடிவங்கள் ஆகும்.

மேலும், மலேரியாவுக்கான ஒட்டுண்ணி மனித உடலில் இருக்கும்போது அதன் வாழ்க்கை வட்டம் பல கட்டங்களில் பல வாழ்க்கை நிலைகளில் மாறக்கூடியது. இந்த ஒட்டுண்ணி மனிதனது நோய் எதிர்ப்பு அமைப்பைக் குழப்பவும் அளிக்கவும் தவறாக வழிநடத்தும். இவை பல உத்திகளை உருவாக்கும்.

இவ்வாறு உலகெங்கும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த மலேரியா 1900 ஆண்டுகளில் இலங்கை





யிலும் தாண்டவமாடத் தொடங்கியது. சாதாரணமாக இருந்த இந்தத் தொற்று நோயானது 1930களில் உச்சக்கட்ட நிலையை எட்டியது. சுமார் 5.5 மில்லியன் (55 லட்சம்) தொற்று நோயாளர்கள் பதிவாகியுள்ளார்கள். இதில் 80 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

அதன் பின்னர் தீவிர முயற்சியால் 1946 களில் இருகுளோரோ இருபினைல் முக்குளோரோத்தீன் எனும் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1960 களில் மலேரியா தொற்றுநோய் படிப்படியாக குறையத் தொடங்கியது.

இருப்பினும் இந்தத் தடுப்பூசிக்கு எதிராக மலேரியா தன்னை மாற்றிக் கொண்டது. அதன் பின்னரே மலத்தியோன், ஆசிட் என்பவற்றின் அறிமுகம் மூலம் மலேரியா கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் மலேரியா குறைந்து கொண்டே வந்தது.

இவ்வாறு 2016ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைச்சால் 'மலேரியா அற்ற இலங்கை' என்ற சான்றிதழை எமது நாடு பெற்றது. பின்னர் 2018 இல் இலங்கையில் மலேரியா அகற்றப்பட்டது. இலங்கை உட்பட உலக அளவில் 38 நாடுகள் மலேரியா அழிக்கப்பட்டதற்கான சான்றிதழ் பெற்றுள்ளன.

மேலும், இலங்கை வெப்பமண்டல நாடாக இருப்பதால் காவிகள் இனப்பெருக்கம் செய்வதற்கு அதிக சந்தர்ப்பமும் ஏற்ற இடமாகவும் அமைகின்றது. இருப்பினும் மேற்குறிப்பிட்டவாறு பல முயற்சிகளின் மத்தியில் இலங்கையில் மலேரியா ஒழிக்கப்பட்டது. இறுதியாக 2012இல் மலேரியா நோயாளி ஒருவர் பதிவாகினார். அதுவே இறுதியாக அமைந்தது.

இவை அனைத்தும் இவ்வாறு கடந்துபோக சமகாலத்தில் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தால் போல் என்ற உவமைக்கு உவமானமாக இலங்கை மாறி வருகின்றது. அதாவது கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட இலங்கைக்குள் மீண்டும் மலேரியா ஊடுருவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசித்து வரும் இலங்கையர்கள் நாடு திரும்புவதால் மலேரியா பரவும் அபாயம் அதிகரித்துள்ளது எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் மீண்டும் மலேரியா வருவதற்கான சாத்தியம் உள்ளது என்பதற்கு ஆதாரபூர்வமாக சமீபத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரங்களில் மலேரியாவைப் பரப்பக்கூடிய நுளம்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் மற்றும் சுற்றுலா மேற்கொண்டு நாடு திரும்பும் இலங்கையர்கள் மூலம் மலேரியா மீண்டும் வரும் அபாயம் உள்ளது. இது மட்டுமன்றி இந்தியா, சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் இலங்கைக்கு மலேரியாவையும் காவிவரக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இரத்தினக்கல் வர்த்தகர்கள் ஆபிரிக்க நாடுகளுக்கு அதாவது மடகஸ்கார் மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்கின்றார்கள். மேலும், இலங்கை இராணுவ வீரர்கள் ஆபிரிக்க பிராந்திய நாடுகளில் சமாதானப் பணிகளில் விடுபட்டு பின்னர் நாடு திரும்புகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளால் மலேரியா நாட்டுக்குள் மீண்டும் பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்



படுகின்றன.

மலேரியா தொடர்பான விழிப்புணர்வுகள் மக்களிடையே வரவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 25ஆம் திகதி உலக மலேரியா தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வாறு மலேரியா மீண்டும் இலங்கைக்குள் வருமாயின் அது பாரிய அழிவை ஏற்படுத்தும். ஆகவே, எம்மால் இயன்றளவு மலேரியாவிலிருந்து எமது நாட்டைப் பாதுகாக்க வேண்டும். அதற்கான உரிய சுகாதார முறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

முக்கியமாக நாம் வெளிப் பயணத்துக்கு முன்னதாக ஒரு வார காலத்துக்கு முன்னர் இலவச மலேரியா தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு மலேரியா எதிர்ப்பு பிரசாரப் பிரிவினரிடம் இருந்து இதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், முக்கியமான விடயம் எமது சுற்றுச் சூழலைத் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம். எமக்கு மலேரியா அறிகுறிகள் தென்படுமாயின் உரிய முறையில் பாதுகாப்பாக இருந்து வேறு எவருக்கும் பரவாத முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இலங்கை மீண்டும் எதிர்நோக்கியுள்ள மலேரியா உயிர்க்கொல்லி நோயிலிருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாப்போம். மலேரியாவை ஒழித்து இலங்கையை எமது வருங்காலச் சந்ததியினருக்கு மலேரியா அற்ற நாடாக ஒப்படைப்போம்.

> **இலங்கை மீண்டும் எதிர்நோக்கியுள்ள மலேரியா உயிர்க்கொல்லி நோயிலிருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாப்போம். மலேரியாவை ஒழித்து இலங்கையை எமது வருங்காலச் சந்ததியினருக்கு மலேரியா அற்ற நாடாக ஒப்படைப்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை முற்றுகையிட சீனாவிற்கு என்ன தேவை?

ந.லோகதயாளன்


கொழும்பில் அமையவுள்ள துறைமுகநகரின் மாதிரி

தெற்கில் கால் பதித்த சீனா இன்று மெல்ல மெல்ல நகர்ந்து யாழ்ப்பாணக் குடா நாட்டையும் தனது முழுமையான முற்றுகை வலயத்திற்குள் கொண்டு வந்துவிட்டது. இதன் அடுத்த கவனிப்பு இந்தியாதான் என்பதனை கண்டறிவதற்கு எந்த இராணுவ வல்லுநர்களும் தேவையில்லை.

கிழக்கு மாகாணத்திலே சீனன்குடா என்னும் பெயரே காணப்பட்டாலும் தெற்கில் மட்டும் இன்று 10 ஆயிரம் சீனர்கள் நிரந்தரமாக தங்கியுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுவது கொரோனாத் தடுப்பூசி அனுப்பிய விடயத்திலும் உறுதியாகின்றது. இவற்றிற்கும் அப்பால் மேலும் பலர் வந்துபோவோர் பட்டியலில் உள்ளனர். கொழும்பிலே 269 ஹெக்டேயர் அல்லது 661 ஏக்கர் அதாவது 2.5 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் அமைக்கப்படும் துறைமுகநகர் இலங்கையின் வரைபடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் புதிய தீவு. அது உருவாக்கப்பட்டு முழுமையான அதிகாரம் கொண்ட ஒரு தீவாக - இன்னுமொரு நாடாக - கையளிக்கப்படவுள்ளது. இலங்கையின் அகராதியில் கூறினால் தனி நாடாக சீனாவின் கொலனியாக வழங்கப்படுகின்றது.

இந்தத் தீவின் மூலம் இலங்கையின் வரைபடத்தில் நிலம் அதிகரிக்கின்றது என்பதனைத் தவிர வேறு ஏதும் நன்மை இலங்கை மக்களிற்கு கிட்டப்போவது கிடையாது. ஆனால் ஆட்சியாளர்களுக்குக் கண்டிப்பாக கிட்டும்.

இந்த தீவிற்கு வழங்கும் தனி அதிகாரத்தை அல்லது சுதந்திரத்தின் எல்லையை இந்த நாட்டின் சொந்த மக்களிற்கு வழங்க மறுத்த ஆட்சியாளர்கள், எவருக்கோ அதை வழங்க இணங்குகின்றனர் என்றால் சோழியன் குடுமி சும்மா ஆடாது என்ற பழமொழிதான் ஞாபகம் வருகின்றது.

**இலங்கை மக்களிற்கு வழங்க மறுத்த உரிமை சீனாவிற்கு விற்கப்படுகின்றது.**

இலங்கை வாழ் மக்களில் ஒரு பகுதியினர், தனியான ஓர் இனத்தினர் தம்மையும் மதித்து ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனித்து சுய கௌரவம் கொண்ட அதிகாரம் கோர முடியாது எனக் குறிப்பிட்டு அதிக குரல் எழுப்பிய கௌதம புத்தரின் சீடர்கள் எனப்படும் பௌத்த துறவிகளும் இவ்விடயத்தில் அதீத மௌனம் காக்கின்றனர். இனவாதிகளோ தமக்கு எந்த அமைச்சுப் பதவி பொருத்தம் என்பது பற்றியே வாதிடுகின்றனர்.

இந்த நாட்டின் இறைமையைக் காக்கவெனக்கூறி லட்சக் கணக்கானோரை அழித்து, தாமும் அழிந்து, பொருளாதாரத்தில் நலிவுற்று, இதே உரிமை கேட்ட இனம் இன்று அழித்து ஒடுக்கப்பட்டு நாதியற்றுக் கிடக்கையில் வேற்று நாட்டவனை அழைத்து வந்து அந்த அதிகாரம் அவனுக்கு வழங்கப்படுகின்றது.

இது தமிழர்களிற்கு ஒரு பாடமோ, இல்லையோ நிச்சயமாக சிங்களவர்களிற்கு ஒரு பாடம்தான்.

ஏனெனில் எமது மண்ணை நாம் தாரை வார்க்கவில்லை என்னும் பெயரில் கடல் வளத்தை அழித்து, தீவு அமைத்து, அந்தப் பகுதியை சீனாவிற்கு தாரை வார்க்கும் அரசுக்கு எதிராக அந்த அரசை வாக்களித்துத் தெரிவு செய்த தாம் குரல் எழுப்ப முடியாமல் உள்ளனரே என்று அவர்கள் இன்று வெட்கித்துப்போய் உள்ளனர்.


வத்திராயனில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா

துறைமுக வசதியுடன் அமையும் இந்தத் தீவிற்கு கப்பலில் கொண்டு வந்து இறக்கப்படும் பொருள்களை இலங்கை அரசு கட்டுப்படுத்த முடியாமல் போகும். ஏன் அதற்கு வரிகூட விதிக்க முடியாது. அதனால் அங்குள்ள சீனர்கள் தமக்கு நினைத்த விலையில் பொருள்களை விற்க முடியும். அந்த தீவில் இருந்து வெளியே வரும் பொருள்களிற்கு எமது அரசு வரி விதிக்கும். அதேநேரம் இலங்கையில் உள்ள சீனர்கள் சென்று கொள்வனவு செய்து வந்தால் அதற்கு தீர்வையிருக்காது. இதனால் இலங்கையில் உள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீனர்களையும் தேடி ஓடும் நிலைமை எமது மக்களிற்கு ஏற்படும்.

**7 சட்டங்களில் இருந்து விடுவிக்கப்படும் சீனர்கள்**

7 ஆண்டுகளில் ஒரு தீவை உருவாக்கியுள்ள சீனாவால் உச்ச பட்சமாக அதே 7 ஆண்டுகளில் அதனை பாரிய நகரமாகவும் மாற்ற முடியும் அவ்வாறு மாற்றினால் இந்தத் தீவிற்கு எமது நாட்டுச் சட்டத்தின் 7 விடயங்கள் பொருந்தாமல் போகின்றமையோடு கொழும்பின் பொருளாதாரமும் பாரிய அளவில் வீழ்ம் நிலைமை ஏற்படும். உள்ளூர் வர்த்தகர்களில் சிறு வர்த்தகர்கள் முதல் பெரும் வர்த்தகர்கள் வரையில் பாதிப்படைவர். ஆனால் இந்தத் தீவின் நுழைவாயிலை அண்டிய பகுதிகள் அபிவிருத்தி அடைந்து சீனர்களிடம் உறவை ஏற்படுத்தி பணத்தை கொடுத்து அனுப்பி விட்டு பொருள் வரவிற்காக காத்து இருக்கும் நிலைமையும் ஏற்படலாம்.

**கொழும்பு வர்த்தகர்களை அழிக்கும் இரகசிய முயற்சியா?**

இலங்கையின் தலை நகரில் இருக்கும் மிகப் பெரும் வர்த்தகர்களில் முஸ்லீம்கள் எனில் அவர்கள் முஸ்லிம் கட்சிகளின் பின்னாலும் தமிழர்கள் தமிழ்க் கட்சிகளோடும் சிங்களவர்களில் அதிகம் ஐ.தே.கட்சியின் பின்னாலும் நிற்கின்றனர் என்றே நீண்டகாலமாக கருதப்படுவதனால் இவர்களின் பாதிப்பு தமது அரசியலில் தாக்கத்தை செலுத்தாது மாறாக நன்மையே கிட்டும் என தற்போதைய ஆட்சியாளர்கள் 7 ஆண்டுகளிற்கு முன்பே எண்ணியிருக்கக் கூடும்.

இலங்கை நாட்டின் சட்டங்களால் கூடக் கட்டுப்படுத்த முடியாத ஓர் இலங்கையின் தீவாக அமையப்போகும் இந்தத் துறைமுக நகர் தொடர்பில் இலங்கையர்கள் - அதிலும் குறிப்பாக சிங்கள மக்கள் - வாய் திறவாத வரையில் ஆட்சியாளர்கள் அதனை நிறைவேற்றவே துடிப்பார்கள். இங்கே இலங்கை மக்களை கட்டுப்படுத்தும் 7 முக்கிய சட்டங்கள் இந்த தீவில் அமைக்கும் துறைமுக நகரைக் கட்டுப்படுத்தாது என்பதோடு இங்கு இடம் பெறும் எந்த விடயத்துக்கும் எமது நீதிமன்றங்களில் வழக்கிடவும் முடியாது என்ற ஒற்றை வார்த்தையின் மூலமே இவர்களிற்கு வழங்கப்படும் தனியான - முழுமையான - அதிகார எல்லை வெளிப்படும்.

**தமிழ் எம்.பிக்கள் எதிர்ப்பு**

கொழும்பில் அமையவுள்ள துறைமுக நகரம் தனியான ஒரு நாட்டைக் கொடுத்து அதனை நிர்வகிக்கவும் ஓர் ஆணைக்குழுவை உருவாக்கி விடுவதற்கு ஒப்பானது எனஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

சீனாவிற்கு இந்த அதிகாரத்தை வழங்க முடியுமானால் எமது தமிழ் மக்களிற்கு ஏன் அவர்களின் பிரதேசத்தில் அதனை வழங்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு சர்ச்சைக்குரிய விடயம் எமது நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் பாரிய அச்சுறுத்தலாகவே அமையும்.

ஆனால் தற்போதும் இது விடயத்தில் இந்தியா மௌனம் காப்பது சீனாவைக் கண்டு இந்தியா அஞ்சுகின்றதோ என்ற எண்ணத்தையே இலங்கை மக்களிடம் - அதிலும் குறிப்பாக தமிழ் மக்களிடம் - ஏற்படுத்துகிறது.

தெற்கில் அலையை ஏற்படுத்தும் சீனா அதே காலத்தில் வடக்கிலும் கால் ஊன்ற முயல்கின்றது.

தெற்கில் இந்த நிலைமை இது எனில், வடக்கிலும் ஆக்கிரமிக்க அத்திவாரமிடப்படுவதோடு திட்டமும் தயாரானதாகவே காணப்படுகின்றது. மூன்று தீவுகள் சீனாவிற்கு தாரை வார்க்கப்படவுள்ளன. ஏ9 வீதியின் சாவகச்சேரி மத்தியிலே அவர்களிற்கான அலுவலகம் கட்டப்படுகின்றது. இவை அனைத்திற்கும் அப்பால் யாழ்ப்பாணத்தில் தனி ஒருவர் அமைக்கின்ற சிறுவர் பூங்காவில் கூட சீனாவின் மொழியை மட்டுமே பின்பற்றும் அளவிற்கு சீனாவின் தாக்கம் அல்லது ஊடுருவல் வேரூன்றி விட்டதனை உணர முடிகின்றது.

> இலங்கை வாழ் மக்களில் ஒரு பகுதியினர் தனித்த சுய கௌரவம் கொண்ட அதிகாரம் கோர முடியாது எனக் குறிப்பிட்டு அதிக இனவாத குரல் எழுப்பிய கௌதம புத்தரின் சீடர்கள் எனப்படும் பௌத்த துறவிகளும் இவ்விடயத்தில் மௌனம் காக்கின்றனர். இனவாதிகளோ தமக்கு எந்த அமைச்சுப் பதவி என்பது பற்றியே வாதிடுகின்றனர்.

இவ்வாறு வடக்கு தெற்கு இருபகுதியிலும் சர்ச்சைக்குரிய இடங்களில் தனது ஆதிக்கத்தை ஒரே நேரத்தில் நிலை நிறுத்த முயற்சிக்கிறது. எங்கு முட்டுக்கட்டை அதிகமாக இருக்கின்றதோ அங்கு வேகத்தைக்குறைத்து மற்றைய திட்டம் வேகம் பெறும், பின்னர் எதிர்ப்பு இருந்த திட்டத்தில் எதிர்ப்பின் வேகம் குறையும்போது அதுவும் முன்னெடுக்கப்படும் என்கின்ற சீனாவின் தந்திரம் வெற்றியளிக்கின்றது.

இதேநேரம் சிங்களம் எங்களைப் பொறுத்தவரை எங்கள் அனுமதி இல்லாமலே ஆக்கிரமிக்கின்றது. அதேநேரம் சீனா ஆக்கிரமிக்கவும் அனுமதிக்கின்றது.

இதற்கு சீனாவிற்கு என்ன தேவை உள்ளது எனப் பார்த்தால் சீன இலங்கையை தனது காலனித்துவ நாடு போன்று வைத்திருப்பதன் மூலம் தனது வலயத்திற்குள் கொண்டு வந்து அடுத்த இலக்காக இந்தியா குறி வைக்கப்படும் என்பதனை கண்டறிவதற்கு எந்த இராணுவ வல்லுநர்களும் தேவையில்லை. சாதாரண ஆய்வாளர்கள், செய்தியாளர்களாலேயே இதனை இலகுவாக உய்த்துணர முடியும். ஆனால் இந்தியா மௌனமாக இருப்பதுதான் ஏன் என்ற பெரும் கேள்வியும் உள்ளது.

இதேநேரம் யாழ்ப்பாணம் வத்திராயனில் அமைக்கப்படும் சிறுவர் பூங்காவிலே சீனமொழியில் நல் வரவு சிறுவர் பூங்கா என்றே எழுதப்பட்டு உள்ளது. ஏன் அதனை சீனமொழியில் எழுதினீர்கள் என அதனை அமைக்கும் பெண் மணியிடம் கேட்டபோது -

"இது ஒரு வடிவம் எனக் கருதியே வரைந்தோம். இது சீன மொழி எனத் தெரியாது" - எனப் பதில் வருகிறது.

"சரி, இப்போது சீன மொழி எனத் தெரிவதனால் அதனை இனியேனும் மாற்றுவீர்களா?" - எனக் கேட்டால் பதில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய மக்களுக்காக பிரார்த்திப்போம் நம்மையும் பாதுகாத்து கொள்வோம்



## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

எம்மைவிட மோசமாக கொரோனா பேராபத்தில் விழுந்து விட்ட அப்பாவி இந்திய மக்களுக்காக, எல்லா பேதங்களையும் தள்ளி வைத்து விட்டு, மனிதத்தின் பெயரால் பிரார்த்தனை செய்யுங்கள் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளவை வருமாறு -

சுமார் 130 கோடி சனத்தொகை கொண்ட பாரத தேசம், இன்று கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி அல்லலுறுகின்றது. இந்திய நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களின் கண்ணீர் எமக்குத் தெரிகிறது. இது கொரோனாச் சுனாமி அவலம் எனக் கூறப்படுகின்றது.

எமது நாட்டிலும் இந்த கொரோனாக் கொடுமை புதிய வீரியத்துடன் பரவி வருகின்றது. நாட்டின் சுகாதாரத் துறையினருக்கு வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலம் இதை நாம் எதிர் கொள்ள வேண்டும். அரசாங்கத்தை பொறுப்புடன் செயற்படுமாறு கூறும் அதேவேளை பொதுமக்களாகிய நாமும் பொறுப்புடன் நடந்து இந்த பேரழிவை எதிர்கொள்ள வேண்டும்.

மிகப்பெரிய சனத்தொகையைக் கொண்டுள்ள எமது மிக நெருங்கிய அயல் நாடான இந்தியாவில், ஒட்டு மொத்த சனத்திரளின் மத்தியில் வீரியமுள்ள கொரோனா கிருமிகள் வேகமாகப் பரவி வருவதை செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் பாரதம் இந்த கொடுமையிலிருந்து விரைவில் மீள வேண்டும் என்ற நோக்கில் நாம் நமது வீடுகளில் இருந்தபடி பூஜை, நமாஸ் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# இலங்கையில் இந்தியர்களை தனிமைப்படுத்தும் வர்த்தகம்

## காவிந்த ஜெயவர்தன



இந்தியர்களை இலங்கைக்குள் தனிமைப்படுத்தி, வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் வர்த்தகம் ஒன்றை சிலர் ஆரம்பித்துள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்காக இணையத்தளத்தில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அமைய இந்தியர்கள் வெளிநாடுகளுக்குத் தொழிலுக்காகச் செல்ல வேண்டுமாயின் வேறு ஒரு நாட்டில் தம்மை 14 நாள்கள் தனிமைப்படுத்திக்கொள்வது அவசியம்.

இதனால், இலங்கையில் உள்ள சில வர்த்தகர்கள், இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முக்கியஸ்தர் இணைந்து இந்த வர்த்தகத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையால், பாதிக்கப்படுவது இலங்கை மக்களே எனவும் காவிந்த ஜெயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# முல்லேரியா வைத்தியசாலையில் ஒக்சிஜனுக்குப் பாரிய தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 28

கொழும்பு கிழக்கு ஆரம்ப வைத்தியசாலையான முல்லேரியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கொவிட் நோயாளிகளுக்கு ஒக்சிஜனை வழங்கப் போதுமான கொள்கலன்கள் கையிருப்பில் இல்லாத காரணத்தால், நோயாளிகளின் உயிர்களுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் கையிருப்பில் 80 கொள்கலன்கள் இருந்த போதிலும் தினமும் 150 ஒக்சிஜன் கொள்கலன்கள் தேவைப்படுகின்றன என வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் 8 கட்டில்களில் நோயாளிகள் நிறைந்துள்ளனர் எனவும் அவர்களில் 6 பேருக்கு கடந்த திங்கட்கிழமை ஒக்சிஜன் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் முதிதா பெரேரா தெரிவித்துள்ளார்.

தினமும் 150 ஒக்சிஜன் கொள்கலன்கள் தேவைப்படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை வைத்தியசாலைக்குத் தேவையான ஒக்சிஜன் கொள்கலன்களை மே 15 ஆம் திகதி வழங்குவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூச்சு விட சிரமப்படும் நோயாளிகளே தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர்களுக்கு ஒக்சிஜனை வழங்குவது அவசியம் ஏற்பட்டுள்ளது எனவும் முதிதா பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# மிக மோசமான ஜனநாயக அடக்கு முறைக்குள் இலங்கை: சர்வதேச தூதுவர்களுடனான சந்திப்பில் சஜித் பிரேமதாஸ



நாட்டு மக்களின் மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு மிக மோசமான அடக்குமுறை ஆட்சியொன்றைக் கையாள அரசாங்கம் முயற்சிப்பதாகவும், அரசாங்கத்துக்கு சவாலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் அளவிற்கு அரச அடக்குமுறை கையாளப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட ஐரோப்பியாவின் முக்கிய நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் -19 வைரஸ் நிலைமையைக் கையாள்வதில் அரசாங்கம் பலவீனப்பட்டுள்ளதாகவும், இலங்கையில் சகல மக்களுக்கும் தடுப்பூசியை ஏற்றும் செயற்பாட்டை முன்னெடுக்க சர்வதேச நாடுகளின் பூரணமான ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி, பிரான்ஸின் தூதுவர் எரிக் லாவெர்ட், இத்தாலியின் தூதுவர் ரீட்டா கியுலியானா மன்னெல்லா, ஜேர்மனியின் தூதுவர் ஹோல்கர் சியூபர்ட், ருமேனியாவின் தூதுவர் விக்டர் சியுஜ்தியா ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம் பெற்றது. இதன் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் யாழில்



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் கொரோனா விழிப்புணர்வு செயற்திட்டமொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு செயற்திட்டம் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த ஹட்டகட்சியின் வழிகாட்டலில், தெல்லிப்பழை பொலிஸ் இன்ஸ்பெக்டர் மேர்சன் இந்துக சில்வாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

பஸ்களில் பயணிப்பவர்கள், சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தில் இருந்து பாதுகாத்து கொள்வதற்கு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை முகக்கவசம் அணியாத பலர், கடுமையான எச்சரிக்கப்பட்டு பொலிஸாரால் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### பீடைகளின் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கு நீரைப் பயன்படுத்தல்



வயலில் நீரை தேக்கி வைத்திருந்து சில நாள்களின் பின்னர் மீண்டும் வயலில் நீரை நிரப்புவது இவ்விவசாயிகளின் பழக்கமாகும்.

இது பீடைகளைக் கட்டுப்படுத்த குறிப்பிட்ட அளவில் பங்களிப்புச் செய்கின்றது. உழுவான், நத்தை, எலி போன்ற பீடைகளின் தாக்கம் நீரைத் தேக்கி வைப்பதால் குறையும்.

நீரை வடிய விடுவதன் மூலம் நெற் பயிர்களிற்கிடையே நுண் சூழலில் (சாரீரப்பதன், வெப்பநிலை போன்றன) ஏற்படும் மாற்றங்களினால் சில பீடைகள் (கபில நிறத் தத்திகள் போன்றன)பெருக்கமடைதல், பரவல் என்பன குறையும்.

நீர் முகாமைத்துவத்தினால் மண்ணின் கட்டமைப்பு விருத்தியடைதல், வேர்த் தொகுதி வளர்ச்சி அடைதல், பீடைகளை எதிர்த்து வளரும் வல்லமை என்பன நெற் பயிரிற்குக் கிட்டும்.


ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவிடம் இருந்ததைவிட அதிக அதிகாரங்கள் கொழும்புத் துறைமுக நகரத்துக்கு இருக்குமாம்

## எச்சரிக்கின்றார் ரணில்





துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்ட மூலத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால் பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கின் சில பகுதிகளை விட கொழும்பு துறைமுக நகரத்துக்கு அதிக அதிகாரங்கள் இருக்கும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற நிலை மாற்றப்பட்டு இப்போது ஒரு நாட்டுக்கு இரண்டு சட்டங்கள் காணப்படுகின்றன எனவும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

தற்போது சீனக் காலனியாக கொழும்புத் துறைமுக நகரம் மாறினால் அது போரின் போது பிரபாகரன் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியை விட அதிக அதிகாரம் கொண்ட பகுதியாக இருக்கும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

ஒரு நல்ல சட்டத்தை எவரும் தடுக்கப் போவதில்லை. அதனை இயற்றுவதற்கு முன்னர் மறுபரிசீலனை செய்ய நீதிபதிகள் இருக்க வேண்டும், அமைச்சரவை இறுதியாகப் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் இங்கு அந்த நிலைமை இல்லை என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

2001 - 2004 இற்கு இடையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது வடக்கு மற்றும் கிழக்கின் பெரும்பகுதியை பிரபாகரன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

நோர்வே கொண்டுவந்த சமாதான உடன்படிக்கை மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு தனி மாநிலத்தை உருவாக்க பிரபாகரனை அனுமதித்தார் என ரணில் விக்கிரமசிங்க மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவுக்கான இலங்கை தூதராக எயார் மார்ஷல் சுமங்கள அந்நாடு அனுமதிக்காதமையால் அவர் இத்தாலிக்கு நியமிப்பு

ஓய்வுபெற்ற விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் கனடாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப் பட்டபோதிலும் அவருக்கான அனுமதியை கனடா வழங்காத காரணத்தால் அவரை இத்தாலிக்கான தூதுவராக நியமித்துள்ளது இலங்கை. இதற்கான அனுமதியை நாடாளுமன்ற உயர்சபை வழங்கியுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதம் ஒட்டாவுக்கான தூதுவராக சுமங்கள டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவரை ஏற்பதற்கான அனுமதியை வழங்குவதில் கனடா பின்னடித்து வந்தது. இந்த நிலையிலேயே அவர் இத்தாலியின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சவூதிக்கான இலங்கையின் தூதுவராக கடந்த நவம்பர் மாதம் அகமட் ஏ. ஜவாத் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் அந்தப் பதவியை ஏற்காத காரணத்தால் பி.எம். அம்சா சவுதிக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பொதுஜன பெரமுனவுடன் நேரடியாகப் பேசுங்கள்

## சுதந்திரக் கட்சியிடம் கூறிய பஸில் ராஜபக்ஷ



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சு மிகவும் காரசாரமாக அமைந்ததாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான பிரச்சினைகளை நேரடியாக பேசி தீர்த்துக்கொள்ளுமாறு பஸில் ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவிடம் கூறியுள்ளார்.

அப்போது இருத்தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் இணைந்த கூட்டணியை சீர்குலைக்கும் நோக்கில் பஸில் இந்த யோசனையை முன்வைத்திருக்கலாம் என சுதந்திரக் கட்சி கருதுவதாகக் கூறப்படுகிறது.

பஸில் ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இப்படியான பேச்சு நடைபெற்றதாகவும் பேச்சு இணக்கப்பாடுகள் இன்றி முடிவடைந்ததாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் ஏனைய 12 கட்சிகளைக் கொண்ட அணியில் முக்கிய கட்சியாக செயற்பட்டு வருகிறது.

இந்த அணியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, திஸ்ஸ விதாரண ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து பேச்சு நடத்தி இருந்தனர்.

# முகக்கவசம் அணியாமல் செல்பவர்களுக்கு வவுனியாவில் கடுமையான நடவடிக்கைகள்

வவுனியா, ஏப். 28



வவுனியாவில் முகக் கவசங்கள் அணிந்து வீதிகளில் செல்லாமை, உரிய முறையில் சுகாதாரத் துறையினரின் பாதுகாப்பை பின்பற்றத் தவறியவர்களுக்கு எதிராக பொலிஸார் கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகளில் நடந்து செல்பவர்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பனவற்றில் பயணிப்பவர்கள் உரிய முறையில் முகக் கவசம் அணிந்து செல்லாதவர்களுக்கு எதிராக இன்றையதினத்திலிருந்து பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா மூன்றாவது அலை பெருக்கெடுக்கத் தொடங்கியுள்ளமையை அடுத்து சுகாதாரத்துறையினர், பொலிஸார் இணைந்து பல்வேறு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து சுகாதார முறைகளை உரிய முறையில் பின்பற்ற தவறியவர்களுக்கு எதிராக பொலிஸாரால் பெயர் விவரங்களை எழுதிய பின்னர் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்படுகின்றனர்.

# கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் தலைவருடன் சந்திப்பைக் கோரியுள்ளார் லக்ஷ்மன் கிரியெல்ல

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் தலைவர் பிப் வின்ஸ்டன் பெர்னாண்டோவுடன் சந்திப்பு ஒன்றை எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சில தகவல்களை பகிர்ந்து கொள்வதற்காக இந்த சந்திப்பை கோருவதாக தாம் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் கத்தோலிக்க ஆயர்களின் மாநாட்டுக்கு அடுத்தடுத்து வழங்கி வரும் தகவல்கள் தொடர்பில் உண்மைகளை முன்வைப்பதற்காக இந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் தலைமை என்பன தாக்குதலின் பிரதான குற்றவாளிகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற அபிலாஷையை கொண்டிருக்கின்றன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பிரச்சினையைத் தீர்த்து, மர்மத்தை வெளிக்கொணர வேண்டும் என்பதே எதிர்க்கட்சியின் விருப்பமாகும்.

அப்போதைய ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ் மா அதிபர் மற்றும் மூத்த பொலிஸ் அதிகாரிகள் இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் எச்சரிக்கப்பட்டனர்.

இருந்த போதிலும், இத்தகைய தாக்குதல் நடந்தமைக்காக அப்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அப்போதைய அமைச்சர்கள் தமது பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

எனினும் சஹ்ரான் ஹஷீம் மற்றும் தௌஹீத் ஜமாத் ஆகியோர் உளவுத்துறையுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தனர்.

மேலும் அவர்களுக்கு சம்பளம் கூட வழங்கப்பட்டன. எனவே இந்த ஆதரவை வழங்கியமைக்காக பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்காத பொறுப்பை அவர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தாக்குதலின் சாட்சிய சான்றுகள் முப்பத்தேழாயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளன. 457 சாட்சிகளின் சான்றுகள் அந்த பக்கங்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஜனாதிபதி ஆணையகத்தின் அறிக்கை எட்டு தொகுதிகளாக இருந்தாலும் முதலாவது மட்டுமே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உளவுத்துறை அதிகாரிகளின் சான்றுகள் பொதுமக்களுக்கு வெளியிடக்கூடாது என்று இதில் கூறப்பட்டுள்ளது.

தெஹிவளை விடுதியில் தம்மைத் தாமே வெடிக்கவைத்த தீவிரவாதியின் மனைவி அளித்த சான்றுகள் சிக்கலானவை என நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதையும் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

# புர்கா உட்பட முகத்தை மறைக்கும் அனைத்து ஆடைகளுக்கும் தடை

இலங்கையில் புர்கா உட்பட முகத்தை மறைக்கும் அனைத்து ஆடைகளுக்கும் தடை விதிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு அனுமதி கிடைத்துள்ளது எனப் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றைத் தடை செய்ய முடிவு எடுக்கப்பட்டது என அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தின் போது அமைச்சர் சரத் வீரசேகர புர்காவிற்கு தடை விதிக்கப்படும் என அறிவித்திருந்தார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முறையான ஆலோசனை மேற்கொண்ட பின்னரே முடிவு எடுக்கப்படும் என அரசாங்கம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# ரிஷாத், ரியாஜ் இருவரையும் 3 மாதங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு உத்தரவு!

## பாதுகாப்பு அமைச்சு அனுமதி என்கிறார் பொலிஸ் பேச்சாளர்



கொழும்பு, ஏப்ரல் 27

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பெறப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

ஏற்கனவே பெறப்பட்டிருந்த 72 மணிநேர தடுப்புக் காலம் இன்று காலையுடன் நிறைவடைந்துள்ள நிலையில், மேலும் 90 நாள்கள் தடுத்து வைப்பதற்கான உத்தரவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குண்டுதாரிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் இவர்கள் இருவரும் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விஞ்ஞான, வாய்வழி, ஆவணப்படம் மற்றும் ஏனைய தொழில்நுட்ப ஆதாரங்களைக் கண்டறிவதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியன விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.



# பலமிக்க ஆட்சியே எங்களின் திட்டம்!

## மஹிந்தவின் கருத்துக்கு விமல், கம்மன்பில கூட்டாகப் பதில்

அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயற்பட வேண்டும்.

- இவ்வாறு அமைச்சர்களும் பங்காளிக் கட்சித் தலைவர்களுமான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமரின் இந்தக் கருத்துக்கள் ஆரோக் கியமானவை அல்ல. அரசுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை - கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்க்கவேண்டும் என்றே நாம் பிரதமரிடம் பல தடவைகள் கோரியிருந்தோம். என்ன முரண்பாடுகள் இருந்தாலும் அதை நேரில் பேசித் தீர்க்கலாம். அதற்கு நாம் தயாராக உள்ளோம்.



அரசை விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து வெளியேறலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எமக்கான கருத்துக்கள், குறிப்பாக பங்காளிக் கட்சிகளுக்குரிய கருத்துக்கள் என்று நூறு வீதம் அர்த்தம் கொள்ளக்கூடாது. இவைபொதுவான கருத்துக்களாகவும் இருக்கலாம். எம்மை நோக்கிய கருத்துக்களாகவும் இருக்கலாம். அவரை தவறான வழிக்கு கொண்டு செல்ல முயல்பவர்களுக்கு அவர் தெரிவித்த கருத்துக்களாகவும் இருக்கலாம்.

எனவே, என்ன பிரச்சினைகள் என்றாலும் நாம் பேசித் தீர்க்க தயாராக இருக்கின்றோம். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறு வதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் செயற்பட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களையும் ஏமாற்றத் தயாரில்லை - என்றனர்.

# மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீளச் சுவீகரிக்கும் நோக்கம் எமக்கில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீண்டும் சுவீகரிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால், நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்கின்றேன்.

- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் காங்கேசன் துறையில் விடுவிக்கப்பட்ட தனியார் காணிகளை இராணுவத்தினர் மீளக் கையகப்படுத்துவது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை நாம் மீள ஆக்கிரமிக்கவில்லை. அவற்றைச் சுவீகரிக்கும் நோக்கமும் எமக்கு இல்லை. காங்கேசன்துறையில் நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் - என்றார்.

# அனைத்துப் பாடசாலைகளும் 30ஆம் திகதி வரை மூடப்படும்

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவே இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தையும், சுகாதார நடைமுறைகளையும் முழுமையாகப் பின்பற்றுமாறு அனைத்து தரப்பினரிடமும் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

# தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்கு தப்பமுயன்ற பங்களாதேஷ் நபர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.27

இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயன்ற பங்களாதேஷ் நாட்டவர் ஒருவரை தனுஷ் கோடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு நபர் தனுஷ்கோடியில் நின்றுகொண்டிருக்கின்றார் எனக் கிடைத்த தகவலின்படி பொலிஸார் ஒருவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்து விசாரித்ததில் திலிப் - நாராயண் என்னும் பெயருடைய பங்களாதேஷ் நாட்டவர் அவர் எனத் தெரியவந்தது.

இவர் மூன்று தினங்களுக்கு முன்பு கொகத்தாவிலிருந்து புறப்பட்டு நேற்று 26 ஆம் திகதி இரவு இராமேஸ்வரம் வந்துள்ளார்.

தனுஷ்கோடியில் இருந்து இலங்கைக்குக் கள்ளத்தனமாகப் படகின் மூலம் இவர் செல்ல இருந்தார் எனத் தனுஷ் கோடி பொலிஸாரின் விசார ணைகளில் இருந்து தெரியவந்தது.

இவர் பத்து வருடங்களுக்கு முன்பு இலங்கையில் வேலை செய்து வந்தார் எனவும், இதனால் மீண்டும் அங்கு செல்ல விரும்பினார் எனவும் தனுஷ்கோடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.



# யானை தாக்கி வயோதிபர் பலி

## திருமலையில் சோகம்



(அப்துல் சலாம் யாசீம்)

திருகோணமலை, ஏப்ரல் 27

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று (செவ்வாய்) அதிகாலை யானை தாக்கி வயோதிபர் ஒருவர் பலியாகியுள்ளார்.

சேருநுவர - ஆர்.பீ.04 பகுதியைச் சேர்ந்த பி. எச்.டி.சுவேற்றி சவரிமுத்து (வயது 77) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்குப் பின்னால் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற வேளையிலேயே யானை தாக்கியுள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான விசாரணைகளை சேருநுவரப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொகவந்தலாவ, கிவ் தோட்டத்தில் ஒரே குடும்பத்தில் 8 பேருக்குத் தொற்று

பொகவந்தலாவ, கிவ் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டு பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது என பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி ஜெய்கணேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவிலேயே இந்தவிடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்றுக்குள்ளான குறித்த குடும்பத்தின் தந்தையுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தொற்றுக்குள்ளான தந்தை பொகவந்தலாவ மோரா தோட்ட தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெறுகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய 8 தொற்றாளர்களும் சித்திரைப் புத்தாண்டுக்காகக் கொழும்புக்குச் சென்று வந்தவர்கள் என பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி ஜெய்கணேஸ் தெரிவித்துள்ளார். தொற்றாளர்களில் 4 மாத குழந்தை ஒன்றும் 7 வயது சிறுவன் ஒருவரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றாளர்கள் வசிக்கும் வீடு மற்றும் அவர்கள் சென்று வந்த இடங்களும் தோட்ட நிர்வாகத்தால் கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக நுவரெலியா பொகவந்தலாவ கெர்க்ஸ்வோல்ட் தோட்டத்திலும் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாகப் பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி ஜெய்கணேஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொட்டகலை நகரிலும் பெண் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது. திங்கள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் கொழும்பு பம்பலப்பிட்டி பகுதிக்குச் சென்று வந்துள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தில் குறைபாடுகள்

## உதய கம்மன்பில கூறுகின்றார்



நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர வலய பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் ஒரு சில குறைப்பாடுகள் காணப்படுகின்றன. இந்தச் சட்டமூலம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானத்தை முறையாகச் செயற்படுத்துவோம். 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்பு ஆணைக்குழு சட்டமூலத்துக்கும், உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்துக்கும் இடையில் பாரியளவு வேறுபாடுகள் கிடையாது என சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகர சட்டமூலம் தொடர்பில் எதிர்த்தரப்பினர் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்துள்ளார்கள். கொழும்பு துறைமுக நகர விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு தற்போது அதிகரித்துள்ளது. ஒரு தரப்பினரது குறுகிய தேவைகளை அரசியல்வாதிகளும், ஆளும் தரப்பின் ஒரு சிலரும் நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தில் தனி நாட்டுக்கான அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி சட்டத்தரணி விஜேயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது. கொழும்புத் துறைமுக நகரத்தில் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு மாத்திரம் காணப்படுகின்றதே தவிர வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை, சர்வதேச ஒப்பந்தங்களுக்கான அங்கீகாரம் என்பதொன்றும் கிடையாது. – என்றார்.

## தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் போடும் பணி இன்று முதல்



ஒக்ஸ்போர்டு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் இன்று முதல் வழங்கப்படும் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அதன்படி முன்னணி சுகாதார ஊழியர்களுக்குத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் இன்று முதல் வழங்கப்படும்.

# கொரோனா வைரஸ் தொற்று கர்ப்பிணிகளுக்கு எச்சரிக்கை

## மகப்பேற்று விசேட வைத்தியர் தெரிவிப்பு

நாட்டில் தற்போது பரவிவரும் புதிய வீரியம் கொண்ட கொவிட் வைரஸால், கர்ப்பிணித்தாய்மார்களுக்கு அச்சுறுத்தல் அதிகம் உள்ளதாகவும் அவர்களின் நுரையீரலுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் மகப்பேற்று விசேட வைத்தியர் மயுரமான தெவோலகே தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால், கர்ப்பிணித்தாய்மார்கள் பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த வைரஸ் தாக்கத்திற்கு உள்ளான கர்ப்பிணித்தாய்மார்களில், அதிகளவானோருக்கு, நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். கொவிட் வைரஸ் தாக்கத்திற்குள்ளான மூன்று கர்ப்பிணித்தாய்மார்கள், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வைரஸ் தாக்காமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றிக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள் தென்படுமாக இருந்தால், உடனடியாக கொவிட் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 2 ஆயிரத்து 578 ஏக்கரில் சிறு போகம் மன்னாரில் மேற்கொள்ளத் தீர்மானம்

மன்னாரிலுள்ள 2 ஆயிரத்து 578 ஏக்கரில், சிறு போக பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான சிறு போக பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பாக மன்னார் உயிலங்குளம் விவசாய மாநாட்டு மண்டபத்தில், அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது 11 ஆம், 12 ஆம், 13 ஆம் கட்டை பிரதான வாய்க்கால்கள், பெரிய உடைப்பு பிரதான வாய்க்கால், சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால், அடைக்கல மோட்டை பிரதான வாய்க்கால் ஆகியவற்றின் ஊடாக 2 ஆயிரத்து 578 ஏக்கரில், நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை மேலதிகமாக குருவில் வான் வாய்க்கால் ஊடாகவும் 400 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான விதை நெல் விநியோகம், உர விநியோகங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச செயலாளர்கள், விவசாய திணைக்களம் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்

## செந்தில் தொண்டான் நம்பிக்கை



அரச பெருந்தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்களை முறையாகப் பெற்றுக் கொள்ள உரிய தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என பிரதமரின் இணைப்புச்செயலாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான செந்தில் தொண்டான் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பெருந்தோட்ட மலையக மக்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்போம் என வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம்.

அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட நிறுவனங்கள் ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவை வழங்காமல் இருக்க தொடர்ந்து பல்வேறு வழிமுறைகளில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

பெருந்தோட்ட அமைச்சின் கீழ் உள்ள அரச தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவில்லை எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 16 அரச பெருந்தோட்டங்கள் உள்ளன. இத்தோட்டங்களில்சுமார் 3 ஆயிரத்து 800 தொழிலாளர்கள் தொழில் புரிகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் கடந்த வெள்ளிக்கிழமை ஆயிரம் ரூபா சம்பள நிலுவை முழுமையாக வழங்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. கூட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவில்லை.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை முழுமையாக பெற்றுக்கொள்ள உரிய தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பின் பின்னர் பெருந்தோட்ட மலையக மக்களுக்கு எதிராகத் தோட்ட நிறுவனங்கள் செயற்படுகின்றன என அறிய முடிகிறது. இந்த விடயம் தொடர்பாக அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அர்ப்பணிப்புடன் செயற்படும். தொழிலாளர்களின் சார்பில் அரசாங்கம் பல தீர்மானங்களை நெருக்கடியான சூழ்நிலையில் முன்னெடுத்துள்ளது.

பெருந்தோட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

## மொழித் தேர்ச்சி பரீட்சைகள் அனைத்தும் ஒத்திவைப்பு

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட விருந்த அனைத்து மொழித் தேர்ச்சி பரீட்சைகளையும் ஒத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப் படும் ஏனைய பரீட்சைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பரீட்சைகள் இடம்பெறும் திகதி எதிர்வரும் காலங்க ளில் அறிவிக்கப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக சுதேவ

பிரபல ஊடகவியலாளரான சுதேவ ஹெட்டியாராச்சி ஜனாதி பதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள் ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இருந்து நியமனக் கடிதத்தை சுதேவ ஹெட்டியாராச்சி நேற்று (செவ்வாய்க்கிழமை) பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

சுதேவ ஹெட்டியாராச்சி அடுத்த வாரம் தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதேவ ஹெட்டியாராச்சி கொழும்பின் ஆனந்த கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கரவெட்டிப் பிரதேச செயலக நிகழ்வில் பங்குபற்றிய 91பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி தெற்கு – மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட 91 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலகத் தில் நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இதில் பிரதேச செயலர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் சான்றிதழ் வழங்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச செயலர் உட்பட 91 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் சில தினங்களில் இவர்களிற்கு பி.சீ.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.




## கொரோனாவிலிருந்து 297 பேர் குணமடைவு

இலங்கை, ஏப்ரல் 28

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளா னவர்களில் மேலும் 279 பேர் நேற்று (செவ்வாய்க் கிழமை) பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண் ணிக்கை 94 ஆயிரத்து 856 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் இதுவரையில் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 376 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந் திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயி ரிழந்தோரின் எண்ணிக்கை இலங்கையில் 647 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டோவுக்குள் இருந்த பணம் வவுனியாவில் திருடப்பட்டது

### பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, மன்னார் வீதியில் உள்ள கல்வி நிலையம் முன்பாகவுள்ள ஒழுங்கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றுக்குள் இருந்த 30 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸில் நேற்று (செவ் வாய்க்கிழமை) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது -

வவுனியா, மன்னார் வீதியில் உள்ள கல்வி நிலையம் ஒன்றின் முன்னாலுள்ள ஒழுங்கையில் உள்ள பந்தல் சேவை முன்பாக கடந்த திங்கட்கிழமை மாலை தனது ஓட்டோவை நிறுத்தி விட்டு அருகில் இருந்த கடை ஒன்றுக்கு சென்று, மீண்டும் திரும்பி வந்த ஓட்டோ சாரதி தனது ஓட் டோவை ஓட்டிச் சென்றுள்ளார்.

சிறிது தூரம் சென்ற பின்னர் ஓட்டோவின் பெட்டியைப் பார்த்த போது அது திறக்கப்பட்டு பின்னர் மூடியிருந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து ஓட்டோ பெட்டியை திறந்து பார்த்த போது அதில் இருந்த 30 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த ஓட்டோ நிறுத்திய இடத்தில் காணப்பட்ட சிசீரிவி காணொலிகளை பார்வையிட்ட போது பிறிதொரு ஓட்டோவில் வந்த மூவர் வேறு சாவி ஒன்றைப் போட்டு ஓட்டோ பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்ட சாரதி வவு னியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் சிசீரிவி காணொலி உதவியுடன் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## ரோயல் – தோமஸ் கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டி ஒத்திவைப்பு

கொழும்பு ரோயல் கல்லூரிக்கும் புனித தோமஸ் கல் லூரிக்கும் இடையில் இடம்பெற விருந்த 142 ஆவது கிரிக் கட் போட்டி ஒத்திவைக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் கின்றது.

மே மாதம் 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் குறித்த போட்டி இடம்பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ள தாக ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

## இறைச்சி தருவதாக கூறி மக்களிடம் பணம் சுருட்டல்

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மான் இறைச்சி தருவதாக கூறி பலரிடம் பணத்தை பெற்று விட்டு இறைச்சி கொடுக்காது ஏமாற்றியவருக்கு எதிராக பொலிஸில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது -

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இரு நாள்களுக்கு முன்னர் நபர் ஒருவர் மான் இறைச்சி தருவதாக கூறி அந்தப் பகுதி மக்கள் பலரிடம் பணம் பெற்றுள்ளமையுடன், இறைச்சியை எடுத்து வருவதாக கூறி சென்றுள்ளார்.

ஆனாலும், பணம் பெற்றுக்கொண்ட மக்களுக்கு இறைச்சியை வழங்கவில்லை. அவர்களின் பணத்தை பெற்ற பின் இறைச்சியைக் கொடுக்காது ஏமாற்றியுள்ளார். இதனையடுத்து பாதிக்கப்பட்ட இருவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். குறித்த முறைப் பாட்டைப் பெற்றுக்கொண்ட வவுனியா பொலிஸார் இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் வவுனியா, மகாறம் பைக்குளம் பகுதியில் மரை இறைச்சி தருவதாக கூறி பலரிடம் பணம் பெற்ற நபர் ஒருவர் இறைச்சியை வழங் காது ஏமாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## போலி நகை தயாரிக்கும் நிறுவனம் சுற்றிவளைப்பு

போலி நகை தயாரிக்கும் நிறுவனம் ஒன்று பியகம பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள் ளது.

பியகம, வல்கம பகுதியில் குறித்த நிறுவனம் முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை காலை 11 மணியள வில் குறித்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட் டுள்ளது.

இதன்போது அங்கிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மல்வானை மற்றும் அநுராதபுரம் பகுதிகளை சேர்ந்த 48 மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கத்தோலிக்கர்களை ஏமாற்றுகிறது அரசு

### துஷார இந்துனில் எம்.பி. தெரிவிப்பு

பேராயரையும் கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றும் வகையிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி எனக் குறிப்பிட்டு ஒருவரை கைது செய்துள்ளனர். இதன் மூலம் நாட்டு மக்கள் திருப்தியடையவில்லை. மாறாக அரசாங்கம் மாத்திரமே திருப்தியடைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியெனக் கூறி ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார். இதில் அரசாங்கம் மாத்திரமே திருப்தியடைந்துள்ளது. இது தொடர்பில் கருத்துக் களைத் தெரிவிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பி னர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார போன்றோரைக் கைது செய்ய முயற்சிக்கப்படுகிறது.

எவ்வித காரணமும் இன்றி ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார். பேராயரையும் கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றுவதற்காக இவ்வாறு செயற்படாமல் உண்மையான குற்ற வாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கு மாறு அரசாங்கத்தை வலியுத்துகின்றோம்.

இது இவ்வாறிருக்க, பொய்களைக் கூறி மக் களிடம் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட அரசாங்கம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் எதிர் பார்ப்புக்களுடன் இந்த அரசாங்கத்தைத் தெரிவு செய்த மக்கள் தோல்வியடைந்துள்ளனர். – என்றார்.

முதலாம் அலையின் போது நாட்டை முடக்கு மாறு நாம் வலியுறுத்திய போது அதனைக் கவனத்தில் கொள்ளாத அரசாங்கம் நிலைமை தீவிரமடைந்ததன் பின்னரே அதற்கான நடவ டிக்கையை முன்னெடுத்தது. இரண்டாம் அலை ஏற்பட்ட போதும் இதே நிலைமையே காணப் பட்டது. தமிழ் – சிங்கள் புத்தாண்டின் போது முறையான கட்டுப்பாடுகளை விதிக்காமையால் தற்போது மூன்றாம் அலைக்கும் முகங் கொடுத்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

## கடத்திச் செல்லப்பட்டது பஸ்; பொலிஸார் உடன் நடவடிக்கை

ஹங்வெல்ல, களுஅக்கல பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்று கடத்திச் செல் லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த 21 ஆம் திகதி அதிகாலையிலேயே இந்த பஸ் கடத்திச் செல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்னர்.

இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட பஸ் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. சி.சி.ரி.வி. காணொலிகள் மூலம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சப்புகஸ்கந்த பகுதியில் வைத்து குறித்த பஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பஸ்ஸின் முன் பகுதி மற்றும் பின் பகுதியின் நிறம் மாற்றப்பட்டு இலக்கத் தகடும் மாற்றப்பட் டிருந்தன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ள னர். இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org